Owned and published by B. Arjunan from 17.2.102
D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed
by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24
Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th July. 2011




**Tirunelveli Special Meeting**



**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை
SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்



**உங்கள் தொலைக்காட்சியில்**



TAMILAN TV
EVERY Monday 6.00 - 6.15 a.m
Z TAMIL TV
EVERY Wednesday 5.45 - 6.00 a.m

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: thewordofchrist@bsnl.in
Website: thewordofchristsouthindia.com

Postal Address:
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்




**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக**
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
**B. அர்ஜுனன்**

மரம் 11 ஜூலை 2011 கனி 8

## ALEXANDRIA - அலெக்சந்திரியா

- இந்நகரம் மகா அலெக்சாந்தர் என்ற மன்னரால் ஏற்படுத்தப்பட்டது.கி.பி.331.
- மத்தியதரைக்கடலுக்கும் நைல் நதிக்கும் இடைப்பட்ட ஒரு குறுகிய நகரம்.
- அலெக்சாந்தரின் இராஜ்யம் அவனுடைய மரணத்திற்குப் பின் பகுக்கப்பட்டபோது அவனுடைய படைத்தலைவர்களில் ஒருவன் எகிப்தை ஆளுகை செய்வான் - தானி.11:4 என்றபடி ஆயிற்று.
- அலெக்சாந்திரியா ஒரு வணிக நகரமாக கோதுமை மற்றும் மதிப்புமிகுந்த பொருட்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்தது - அப்.27:38.
- அலெக்சந்திரியா பட்டணம் அப்போஸ்தலர் புத்தகத்தில் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது - அப்.6:9
- சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர் கொண்ட யூதன் அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவன் - அப்.18:24








## கர்த்தருடைய ஊழியம் வளர்ந்து பெருக

### உதவ காத்திருக்கும் இவர்களோடு தொடர்புகொள்ளவும்


சகோ. ஜான் எஸ். நாதன்
திருவள்ளூர் மாவட்டம்
9444443378


சகோ. பெர்னான்டஸ்
தருமபுரி மாவட்டம்
9788319730


சகோ. மாயாண்டி
மதுரை மாவட்டம்
9373788465


சகோ. ராஜாமணி
திருநெல்வேலி மாவட்டம்
9940841932


சகோ. சாமுவேல் மணி
தேனி மாவட்டம்
9487829329


சகோ. ராஜசெல்வம்
கன்னியாகுமரி மாவட்டம்
9487954973


சகோ. பூபதி
கரூர் மாவட்டம்
9487064827


சகோ. ராம்ராஜ்
திருப்பூர் மாவட்டம்
9487043077


சகோ. யோவான்
விழுப்புரம் மாவட்டம்
9940487200


சகோ. அர்ஜுனன்
திண்டுக்கல் மாவட்டம்
9443558041



## வேத அறிவுப் போட்டி எண் : 131

போட்டியாளர்கள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. மோசே தேவனோடே பேசும்படி ஆசாரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவருடைய சத்தத்தை எவைகளின் நடுவிலிருந்துண்டாகக் கேட்பான்?
2. ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை விசாரிக்க முடியுமா?
3. அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்று மோசே யாரைப் பார்த்து சொன்னான்?
4. உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் எவைகள் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது?
5. எமோரியரின் இரண்டு ராஜாக்களை துரத்த கர்த்தர் எவைகளை அனுப்பினார்?
6. சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கு செவிகொடுக்கலாமா?
7. தெபொராளின் நாட்களில் அவரில் அன்பு கூருகிறவர்களோ, வல்லமையோடே உதிக்கிற எதைப்போல இருக்கக்கடவர்கள் என்று பாடினார்கள்?
8. ஆபிரகாம் யாருக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்?
9. தீர்க்கதரிசியினிடத்தில் வந்து ஞானதிருஷ்டிக்காரன் வீடு எங்கே, சொல்லும் என்று கேட்டவன் யார்?
10. பூரண நிறைவுள்ளவர்களாய் இருக்கும்படி, எது பூரண கிரியை செய்யக்கடவது?

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

சிறுவர் பகுதி

# சரட்டையாகிலும்...

வேதபகுதி:ஆதியாகமம்14:21-24

ஆபிரகாமைப் பற்றி நாம் அநேகமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் நமது விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். நம்முடைய தேவனாகிய கர்த்தர் இந்த ஆபிரகாமை அபரிவிதமாக ஆசீர்வதித்திருந்தார். எப்படியென்றால் "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்". இந்த ஆசீர்வாதத்துக்கு ஆபிரகாம் பாத்திரவனாயிருந்தார். சரி, என்ன சரடு என்று கேட்கிறீர்களா? ஆபிரகாம் பிறனுக்குள்ள ஒரு சாதாரண சரட்டைக் கூட இச்சிக்கவில்லை.

சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத்தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப்பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார்.

பொருள்கள் என்றால் நமக்கு கொள்ளை ஆசை. இதைத்தா, அதைத்தா என்று இருக்கிற எல்லாவற்றையும் கேட்டுவாங்கிவிடுவோம். ஆனால் ஆபிரகாமோ அப்படியில்லை. கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார். ஏன் நாமும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்காது நம்முடைய தேவனுக்கு நேராக ஜெபித்து பெற்றுக்கொள்ளக்கூடாது? முடியும், இல்லையா? அப்படியானால் நாமும் விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமைப்போல பிறனுக்குள்ள ஒரு சின்ன பென்சிலைக்கூட எடுத்துக்கொள்ளாமல் தேவனிடத்தில் கேட்போம். அவர் ஆபிரகாமை ஆசீர்வதித்தது போல நம்மையும் ஆசீர்வதித்து வழிநடத்துவார்.

**மனப்பாட வசனம்**

"வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்" (ஆதியாகமம்14:23)

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக – யாத்திராகமம் 20:17





# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
## THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 11 ஜூலை - 2011 கனி - 8


ஆசிரியருரை

# ஆகானின் பாவம்
## Sin of Achan




**பா**வம் ஒரு மனிதனை பல வழிகளில் ஆண்டுவருகிறது. அவன் அதற்கு இடம்கொடுக்கும்போது அவனுக்குள் அந்த பாவம் வந்து தங்கி குடிகொள்ளும். இஸ்ரவேலிலே ஆகான் என்ற ஒரு மனுஷன் இருந்தான். **அவன் சாபத்தீடானதை இச்சித்து எடுத்துக்கொண்டான்.** அதினாலே இஸ்ரவேலர் ஆயி என்ற பட்டணத்தில் தோற்றுப்போனார்கள். எரிகோவை வெற்றிகொண்ட இஸ்ரவேலர் ஆயி என்ற சிறிய பட்டணத்தில் தோற்றுப்போனதற்கு மிக முக்கியமான காரணம் இந்த ஆகானின் பாவம்தான். அப்படி என்ன பாவம் செய்தான் என்று நீங்கள் கேட்பீர்கள். "கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறுவெள்ளிச்சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்; இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது, வெள்ளி அதின் அடியிலிருக்கிறது என்றான்" (யோசு.7:21). நாட்டைப்பிடிக்க சென்றவன் தன் கண்கள் இச்சித்தவைகளை எடுத்து தன் கூடாரத்தின் மத்தியில் யாருக்கும் தெரியாவண்ணம் பூமிக்குள் புதைத்துவைத்தான். அது தனக்கு பயன்படும் என்றுதானே புதைத்துவைத்தான். அவைகளை எடுக்காதீர்கள் என்ற கட்டளை கர்த்தரால் பிறபிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் அவைகள் சாபத்தீடானவைகள். இன்றும் எத்தனையோ சாபத்தீடான காரியங்கள் இருக்கிறது. அவைகளை தேவமக்கள் நாடிப்போகிறார்கள். அவைகளை இச்சித்து எடுத்துக்கொள்கிறார்கள். கர்த்தர் காண்கிறார் என்ற பயம் இல்லாமற்போகிறது. இதுவும் பாவமே. ஆகானுடைய பாவம் அவனுடைய குடும்பத்தை மட்டுமல்ல இஸ்ரவேலுக்கே

தோல்வியை கொண்டுவந்தது. இவைகளை அறிந்த யோசுவா “சேராகின் புத்திரனாகிய ஆகானையும், அந்த வெள்ளியையும் சால்வையையும் பொன்பாளத்தையும் அவன் குமாரரையும் குமாரத்திகளையும், அவன் மாடுகளையும் கழுதைகளையும், அவனுக்குள்ள யாவையும் எடுத்து, ஆகோர் பள்ளத்தாக்குக்குக் கொண்டுபோனார்கள். அங்கே யோசுவா; நீ எங்களைக் கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார் என்றான். அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியில் சுட்டெரித்து, கற்களினால் மூடி; அவன்மேல் இந்நாள்வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்” (யோசு.7:24,25). யோசுவா அவனையும் அவனுடைய உடைமைகளையும் இஸ்ரவேலிலே சேர்த்துக்கொள்ளவில்லை. சாபத்தீடானதை எடுத்தபடியினாலே கல்லெறியுண்டு கொலைசெய்யப்பட்டதை பார்க்கிறோம். அன்பு நேயரே, கர்த்தருக்கு விரோதமான பாவத்திலே வீழ்ந்துபோகிறவர்கள் நியாயப்பிரமாணத்தின் படி தண்டிக்கப்பட்டார்கள். கிருபையின் நாட்களில் இருக்கிற நமக்கு ஒருவேளை இது எச்சரிப்பாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சாபத்தீடானதைக்குறித்த விஷயத்தில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். புதிய ஏற்பாட்டு காலத்தின் கீழ் அதாவது அந்த உபதேசத்தின் கீழ்வாழ்ந்த மக்கள் கூட பாவத்தினால் வந்தவைகளை சுட்டெரித்துப்போட்டார்கள் என அப்.19:19-ல் வாசிக்கிறோம். “மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்”. பாவத்தினால் வரும் ஆதாயம் சாபம். ஆகையால் அவைகளை சுட்டெரித்துப்போட தயங்கக்கூடாது.

இரண்டாவதாக நாம் பார்க்கும்போது **ஆகான் கர்த்தரின் உடன்படிக்கையை மீறினான்**. எப்படியென்றால் “சாபத்தீடானதை எடுத்தவனாய்க் கண்டுபிடிக்கப்படுகிறவன், கர்த்தரின் உடன்படிக்கையை மீறி, இஸ்ரவேலிலே மதிகேடான காரியத்தைச் செய்தபடியினால், அவனும் அவனுக்குள்ள யாவும் அக்கினியில் சுட்டெரிக்கப்படக்கடவது” என்று சொல்லப்பட்டது (யோசு7:15). தேவனாகிய கர்த்தர் மனுஷனை மண்ணினாலே உருவாக்கி தமது ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். அவன் ஜீவஆத்துமாவானான். இன்னும் அவனுக்கு தேவையான அனைத்தையும் ஏதேன் தோட்டத்தில் கொடுத்து இவைகளை எல்லாம் ஆண்டுகொள்ளுங்கள் என்றார். தேவன் மனிதனுக்காக கொடுக்காதது என்ன இருக்கிறது? இத்தனை ஆசீர்வாங்களைப் பெற்ற மனிதன் கர்த்தருக்கு எவ்வளவு உண்மையும் உத்தமுமாக இருக்கவேண்டும். இதை விட்டுவிட்டு பிசாசு கொண்டு வருகிற மாம்சத்தின் இச்சைக்கும், கண்களின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஆகானைப்போல மதிகெட்ட காரியத்தை செய்ய துணிந்துவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இஸ்ரவேலுக்குள் இருப்பதை அறிந்த கர்த்தர் யோசுவாவுக்கு அவைகளைத் தெரிவித்தார். “இஸ்ரவேலர்கள்



மேலானவர் என்றும், அவரே தேவனாகவுமிருக்கிறார். தேவன் தாமே கன்னியின் மைந்தனாக பிறந்ததினால் "இம்மானுயேல்" என்றழைக்கப்பட்டார். (ஏசா7:14; 9:6) இவர் தேவனின் மகிமையின் பிரகாசமாக அவரின் தன்மையின் சொருபமானார் (எபி.1:3) JEHOVAH (யேகோவா) இருக்கிறவராக இருக்கிறேன் (தாமே என்றும் இருக்கிறவர்)

**பொத்தமான குறிப்பு:** தேவன்தாமே என்றும் மாறாதவர். அவருடைய வாக்குத்தத்தங்கள் என்றும் மாறாதவைகள். நாம் நன்றியற்றவர்களாகவும், உண்மையற்றவர்களாக இருந்தாலும் அவர் என்றும் உண்மையுள்ளவர் எனவே நாம் அனைவரும் அவருக்குக் கீழ்ப்படிந்திட வேண்டும்.

**வேத குறிப்பு:** யாத்.3:14; 6:2-4; 34:5-7; சங்.102.

**உச்சரிப்பு:** யேகோவா 16-ம் நூற்றாண்டில் ஜெர்மானியர் YHVH,YHWH என்பதை "அதேனாய்" என்கிற வார்த்தையை உயிரெழுத்தாக பயன்படுத்தினர். ஏனெனில் அவர் பண்டைய யூத நூலின் வாசகத்தை பயன்படுத்தினார். அதினின்று மொழிபெயர்க்கப்பட்டதுதான் "அதோனாய்" என்ற உயிரெழுத்தை ஒத்திருக்கிற பொருத்தமான (YHVH) **யாவே** இவ்வாறாக அமைந்ததினால் JEHOVAH (Yahovah சரியாக இடம்பெற்றது.

**JEHOVA H-JIREH யேகோவாயீரே.**

**பொருள்:** கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

**பொருத்தமான குறிப்பு:** பாவனையாக (நிழலாட்டாய்) திரும்பவும் பெற்றுக்கொண்டான் எபி.11:19. கர்த்தர், ஈசாக்கை பலியிடுவதற்கு பதிலாக இவ்விதம் ஒரு ஆட்டுக்கடாவை பலியாக அளித்து உதவினாரே, அவ்விதமாகவே உலக மக்களின் பாவத்தை போக்கும் பலியாக (யோவா.1:29) தேவன் தமது ஒரேபேரான நேசகுமாரனை இயேசுவை நமக்காக (Real லாக) உண்மையாகவே ஒப்புக்கொடுத்தார். அவ்வாரே தேவன் நம் அனைவரின் இக்கட்டான நேரத்தின் தேவைகளை நமக்கு அறிந்து நமக்கு கொடுத்துதவுவார்.

**வேத குறிப்பு:** ஆதி.22:13-14; சங்.23; மாற்.10:45; ரோம.8:2.

**உச்சரிப்பு:** "யேகோவா யீரே" அல்லது "யாவே யீரே" ஆபிரகாம் அவ்விடத்திற்கு கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக்கொள்ளப்படும் (யேகோவாயீரே) என்று பெயரிட்டான். ஆபிரகாமின் ஏக புதல்வன் ஈசாக்கை தேவனுக்கு பலியிட ஒப்புக்கொடுத்தபோது, அவனுக்குப் பதிலாக ஆட்டுக்கடாவை பலியிட வைத்திருந்தாரோ அவ்வாறே இயேசுதாமே தம்முடையவர்களுக்கு "ஜீவ அப்பம் நானே" (யோவா.6:35) என்றதினால் அவரிடத்தில் வருகிறவன் ஒருவனாகிலும் ஒருக்காலும் பசியடையான் என்றார்.

**இது குறித்து மேலும் விபரம் தேவைப்பட்டால்...**

நீங்கள் தொலைபேசியிலோ அல்லது கடிதம் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். உங்களுக்கு உதவும்படியாக சகோ. ஜான் எஸ். நாதன் அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார். தொடர்பு எண்: 9444443378 முகவரி: சகோ. ஜான் எஸ்.நாதன், கிறிஸ்துவின் சபை போதகர், கிறிஸ்டியன் சிட்டி, மீஞ்சூர் -601 203, தென் இந்தியா என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**வேத குறிப்பு:** ஆதி.21:33; சங்.90:1-2; ஏசா.40:28-30; ரோம.1:20

**உச்சரிப்பு: (el o LAHM)** ஏல் ஓலோம். இயேசுகிறிஸ்து நித்திய தனியியல்புடையவராய் உள்ளவர் எபி.13:8 அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறார். அவர் நமக்கு நித்திய மீட்பை எபி.9:12 உண்டுபண்ணுவார்.

**EL ROI ஏல் ரோய்**

**பொருள்:** என்னைக் காண்கிற தேவன்.

**பொருத்தமான குறிப்பு:** நமது வாழ்வில் ஆபத்தில் தப்பிக்கொள்ளும் குறிப்பிட்ட சூழ்நிலைமையை அறிந்த தேவன் நம்மை தந்தையை போன்றிருந்து நம்மை பாதுகாக்கிறார், எனவே தேவன் நன்கு நம்மை அறிந்து நமது தீமையினின்று காப்பாற்றுகிறார்.

**வேதகுறிப்பு:** ஆதி.16:11-14; சங்.139:7-12.

**உச்சரிப்பு:** ஏல்ரோய் (சாரா) சாராளின் அடிமைப் பெண்ணான "ஆகார்" (ஆதி.16:11-14) தேவனை வனாந்தரத்தில் லகாய்ரோயீ என்ற துரவண்டையில் இருந்தபோது ஏல்ரோயீ என்றழைத்தாள். எனவே தேவன் நமது எண்ணங்களையும், நினைவுகளையும் நன்கு அறிகிறார். இயேசுவும் தம்முடையவர்களுக்கு தம்மை அறிகிற, காண்கிற தேவனாகவே (ஏல்ரோயாக) இருக்கிறார்! மத்.22:18; 26:21-34; லூக்.5:21-24.

**EL SHADDAI (ஏல் ஷடாய்)**

**பொருள்:** எல்லாம் நிறைந்த, மலைகளின் தேவன். சர்வவல்லமையுள்ள தேவன்.

**பொருத்தமான குறிப்பு:** தேவனானவர் எல்லா நன்மைகளையும், ஆசீவாதங்களையும் அளிப்பவர். சர்வவல்லமையுள்ள தேவன், நம்முடைய எல்லா சிக்கல்களையும், நம்மால் முடியாத பாரமான யாவற்றையும், தோல்விகளையும் வெற்றியாக முடிப்பது அவருக்கு லேசானகாரியம்.

**வேதகுறிப்பு:** ஆதி.17:1-3; 48:3; 49:25; 35:11; சங்.90:12.

**உச்சரிப்பு:** (ஏல் ஷடாய்) சில வேத வித்தர்கள் "ஏல் ஷடாய்" என்பது தேவனின் வல்லமை, அவரின் நியாயத்தீர்ப்பு தெளிவாய்த் தெரிகிறது என்றும் மற்றோர் "ஏல் ஷடாய்" என்றால் மலைகளின் தேவன் என்றும் தேவன்தாமே ஏல்-ஷடாயாக இருக்கிறார். தம்முடைய உடன்படிக்கையை ஆபிரகாமுடன் செய்து உறுதிப்படுத்தினார்.

**IMMANUEL இம்மானுயேல் (இம்மானுவேல்)** Immanuvel என்று இல்லை என்பதை கவனமாய் கவனியுங்கள். நம்முடன் இருக்கும் தேவனை இம்மானுவேல் என்று அழைத்தால் நம்மோடு இருக்கும் "வேல்" ஆகும்!

ஏலுக்கும் - வேலுக்கும் சம்பந்தம் ஏது? (ஏல் - தேவன்) எனவே வேல் என்றழைப்பது, எழுதுவது மாபெரும் தவறு! தேவனாகிய இயேசு நம்முடனே கூட இருக்கிறார். முழு சரீரபிரகாரமாக தேவத்துவம் நம்மில் வாசமாயிருக்கிறார்.

**வேதகுறிப்பு:** ஏசா.7:14; 8:8-10; மத்.1:23.

**உச்சரிப்பு:** இம்மானுயேல் இயேசுக்குள்ள இப்பெயர் மனிதனைவிட அவர்



பாவம் செய்தார்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்; சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டதும் களவுசெய்ததும், வஞ்சித்ததும், தங்கள் பண்டம்பாடிகளுக்குள்ளே வைத்ததும் உண்டே" என்றார் (யோசு.7:11). தேவனுடைய உடன்படிக்கையை மீறுவதும் பாவம். இதை அவர்களுக்கு எழுதிகொடுத்திருந்தார். யாத்.20:15,17 வசனங்களில் வாசிக்கிறோம் "களவு செய்யாதிருப்பாயாக" "பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" என்ற கட்டளையை பெற்ற இஸ்ரவேலர் இக்கட்ளையை மீறி நடக்க காரணமானார்கள். புது உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்த முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களில் அனனியா சப்பிராளும் பாவம் செய்தார்கள். "தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்" (அப்.5:2-4). பாவம் எப்படி வருகிறது என்று பார்த்தீர்களா? அனனியா தன் நிலத்தை விற்று அதில் ஒரு பங்கை வஞ்சிக்கவேண்டிய அவசியம் இல்லை. அதுவும் அனனியாவின் மனைவி சப்பிராளிடம் நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள் எனக்குச் சொல் என்று பேதுரு கேட்கும்போது அவள் ஆம் இவ்வளவுக்குத்தான் என்று திட்டமிட்டபடியே, சத்தானுடைய ஏவுதளின்படியே இருவரும் ஒருமிக்க பொய் சொன்னபடியால் அப்போஸ்தருடைய பாதத்தில் விழுந்து ஜீவனைவிட்டார்கள். ஒரு மனிதன் பாவத்துக்கு அடிமையாகும்போது பாவம் அவனை பின்தொடர்வதை அறிகிறோம். பாவத்தின் பலன் அதாவது கூலி மரணம் என்று காண்கிறோம்.

மூன்றாவதாக நாம் ஆகானைக்குறித்து தியானிக்கும்போது **அவன் இஸ்ரவேலிலே மதிகேடான காரியத்தை செய்தான்** என் அறிகிறோம். இன்றும் கூட சிலர் புத்தியை சீர்கொடுத்துவிட்டேன் என்பார்கள். அப்படியானால் மதிகேடாய் நடந்துவிட்டேன் என்பார்கள். தேவன் நமக்கு புத்தியை தந்திருக்கிறார். அவைகளை நாம் ஞானமாக பயன்படுத்தவேண்டுமல்லவா, கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும் என நீதிமொழிகளில் சாலொமோன் ஞானி குறிப்பிடுகிறார். ஆகானுடைய மதிகேடான காரியம் என்னவென்றால் அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன் என்றான். இச்சையை தூண்டுகிறவன் பிசாசு. ஆதியிலே சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை

தீமை அறிந்து தேவர்களைப்போல இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. இதற்கு மயங்கிப்போன ஏவாளும் ஆதாமும் அதை பறித்து புசித்து பாவத்திற்குட்பட்டனர். மதிகேடு இப்படித்தான் வரும். நம்முடைய சிந்தையை பிசாசு மதிகேடாய் நடக்கும்படி கெடுத்துவிடுவான். நல்ல குடும்பங்களெல்லாம் இப்படித்தான் பிசாசின் உபதேசங்களுக்கு செவிகொடுத்து கெட்டுப்போய்விடுகிறார்கள். எலிசாவிடம் கேயாசி என்ற ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் “சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டுவிட்டார் நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையிட்டு. நாகமானை பின்தொடர்ந்து அவனிடத்திலிருந்து இரண்டு தாலந்து வெள்ளியையும் இரண்டு மாற்று வஸ்திரங்களையும் பொய் சொல்லி பெற்றுக்கொண்டு வந்து தன் கூடாரத்தில் வைத்தான். பின்பு கேயாசியோ எங்கும்போகாததுபோல எலிசாவின் வீட்டிற்கு முன்பு வந்து நின்றான். எலிசா அவனைப் பார்த்து கேயாசியே எங்கேயிருந்து வருகிறாய் என்று கேட்டதற்கு அவன் உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான். அப்பொழுது எலிசா கேயாசியைப் பார்த்து; அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டுவர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடன்கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான். அந்தப்படியாக உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி அவன் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டுபோனான்”. அதைபோல யூதாசும் பணப்பைவைத்து சுமக்கிறவனாயிருந்து இயேசுவை காட்டிக் கொடுத்து இரத்த நிலத்தை சம்பாதித்தான். இந்த ஆகானின் பாவம் அவனையும் பற்றிப்பிடித்தது. ஒருவேளை நாமும் இந்த ஆகானைப்போல சாபத்தீடானதை எடுத்துக் கொண்டு தேவகோபத்திற்கு உட்படாமல் இருக்க அவைகளை நம்முடைய சரீரத்தில் உண்டுபண்ணுகிற அவயவங்களை அழித்துப்போடுவோம்.

**பாவம் செய்கிற ஆத்துமா சாகுமா?**

ஆம், “பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்” (எசே.18:20). யார் பாவம் செய்கிறார்களோ அவர்களுடைய ஆத்துமாவே சாகும் என வாசிக்கிறோம். ஆகானின் குடும்பம் அழிக்கப்பட்டதே என்று கேட்கலாம் அவனுடைய குடும்பத்தார் அதற்கு உடந்தையாக இருந்திருக்கலாம். மேலும் கேயாசி நாகமான் கொடுத்ததை அவன் வீட்டில் வைத்தான் அவர்களுக்கு அவைகள் நிச்சயமாக தெரிந்திருக்கும். அவனுடைய குடும்பத்தார் அவைகளை உடனே எலிசாவுக்கு தெரிவிக்கவில்லை ஆகையால் உன் சந்ததிக்கும் குஷ்டம்பிடிக்கும்





# தெரிந்துகொள்வோம்

John S.Nathan Gospel Minister
cell:9444443378




**EL ELYON (யேல் யேலியான்)**

**பொருள்:** உன்னதமான தேவன். நமது முழு நம்பிக்கை வைக்கும்படியான உன்னத தேவன்.

**பொருத்தமான குறிப்பு:** ஒப்புயர்வற்ற இறைமையாளர். மெய்யானவர்.

**வேத குறிப்பு:** ஆதி.14:17-20; யாத்.5:1; சங்.68:8; 106:48

**உச்சரிப்பு:** யேல். யேல்-லியான். உன்னதமான தேவனுடைய ஆசாரியராய் இருந்தவர். "மெல்கிசேதேக்கு" (எருசலேம் நகரத்தின் பழைய பெயரில் மத்திய கிழக்கு நாடுகளிலும், ஐரோப்பா கண்டத்தில் பல நகரங்களிலும் அமெரிக்காவில் 3 நகரங்களிலும், தமிழகத்தில் **(Salem-சேலம்)** என்ற நகரமும் அழைக்கப்படுகிறது) இவர் அரசனாகவும், ஆசாரியனாகவும் செயல்பட்டவர். (இயேசுவுக்கு நிழலானவர்) ஆதி.14:18-20-ல் மூன்று முறை உன்னதமாக தேவன் அழைக்கப்பட்டுளளதை அறிக! இப்பேர் பெற்றவன் "ஆபிராமை" ஆசீர்வதித்தான்.

**ELOHIM (யேலோஹிம்)** நித்திய (அழிவில்லாத) தேவன் சர்வ வல்லமையுள்ள சிருஷ்டி கர்த்தர்.

**பொருள்:** வானத்தையும், பூமியையும் படைத்த வல்லமையுள்ள தேவன். எல்லாவற்றையும் அறிந்தவர். எங்கும் எப்போதும் ஜீவிக்கிறவர். "யேல்" என்பதின் பண்புப் பெயர்.

**வேதகுறிப்பு:** ஆதி.1:1-3; உபா.10:17;சங்.68; மாற்.13:19.

**உச்சரிப்பு: (El-o HEEM)** ஏலோஹிம். சிருஷ்டிக்கப்பட்டவர்களுக்கு, சிருஷ்டிக் கர்த்தாவுடன் உறவாக அமையபெற்றது. ஆதி.1:26-ல் காணப்படும் "மனுஷனை உண்டாக்குவோமாக" என்றதால் படைப்பின் போது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் உடனிருந்தனர் என்பதை அறிய முடிகிறது. அதே நேரத்தில் "ஏலோஹிம்" பொய்யான **(False Gods)** கடவுள்களையும் மற்றும் மனித நியாயாதிபதிகளையும் குறிக்கிறது என்பதை அறிக. சங்.82:6-7, யோவா.10:34.

**ELOLAM "ஏல் ஓலம்"**

**பொருள்:** நித்திய தேவன். அநாதி தேவன். ஆதியும், அந்தமுமானவர். சோர்வுற்றவர்களுக்கு சத்துவத்தை அளித்துவருபவர். தமது நற்கிரியையை உலக முண்டாவதற்கு முதற்கொண்டு இன்றும் நமக்கு தொடர்ந்து உதவி செய்து வருகிறார்.

அதின்படி செய்யாத போது வஞ்சித்துக்கொள்ளுகிறோம். “--நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின் படி செய்கிறவர்களாயும் இருங்கள்” (யாக்.1:22). சிலர் வசனம் இப்படியா இருக்கிறது என மனோவாஞ்சையாயிராமல், எங்களுக்குக் கர்த்தர் அதை வெளிப்படுத்தினார் இதை வெளிப்படுத்தினார் என தங்களுடைய இருதயத்தின் எண்ணங்களுக்கே இடமளித்து வஞ்சிக்கப்படுகிறார்கள். நம்முடைய நினைவுகள் கர்த்தருடைய நினைவுகள் அல்ல என்பதை மறந்து விடக்கூடாது, திருவசனம் சபை கூடிவருதலை வலியுறுத்துகிறது (எபி 10:25). ஆனால் நம்மில் எத்தனைபேர் இவ்வசனத்திற்குக் கீழ்ப்படிந்து வாரந்தோறும் சபைக்குச் சென்று தேவனை ஆராதிக்கிறோம்? போதாகுறைக்கு முகூர்த்தங்களெல்லாம் ஞாயிற்று கிழமையிலே நடக்கிறது. போகாவிட்டால் உறவினர்கள் கோபித்துக்கொள்வார்கள் என கர்த்தருடைய நாளை தங்கள் சொந்த நாளாக மாற்றிவிடுகின்றோமா? நாளானது சமீபித்து வருகிறதை பார்த்து சத்தியத்தை அறிந்து பின் மனப்பூர்வமாக பாவஞ்செய்து மோசம் போனால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். மேலும் கர்த்தருக்கு செலுத்த வேண்டியதை சபையில் செலுத்தாமலிருந்தாலும் நம்மை நாமே வஞ்சித்து அழிவை சம்பாதித்துக் கொள்வோம். சப்பீராள் என்ற ஸ்திரீ கர்த்தருடைய சமூகத்திற்குக் கொண்டு வந்து கொடுக்கவேண்டிய கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து கணவனோடு சேர்ந்து கர்த்தருடைய ஆவியை சோதித்தபடியால் மரித்துப்போனாள். அன்பு சகோதரியே, நீ இன்று வாழும் வாழ்வு, உன்னுடைய சம்பத்துக்கள் எல்லாமே கர்த்தர் உனக்கு கொடுத்தவை என அறிவாயா? பரலோக ராஜ்யத்தின் பணிக்கென நீ கொடுக்காமல் பொருளாசைக்கு இடமளித்து உன்னை நீயே வஞ்சித்துக் கொள்ளாதே “சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான் பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்” (2கொரி.9:6).

மற்றவர்களை வஞ்சித்தல்: கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைப்போல ஜீவிக்கிறவர்களாயிருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற அநேகர் மற்றவர்களை வஞ்சித்து தேவநாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகின்றனர். வேதாகமத்தில் லாபான் என்றவன் யாக்கோபை வஞ்சித்தான் என வாசிக்கிறோம் (ஆதி.29:25). யாக்கோபு லாபானின் மகள் ராகேலை திருமணம் செய்யும்படி அவளுக்காக ஏழு வருஷம் லாபானிடம் வேலை செய்தான். ஏழு வருடம் முடிந்ததும் லாபான் ராகேலுக்கு பதிலாக தன் மூத்த மகள் லேயாளை மனைவியாகக் கொடுத்து வஞ்சிக்கிறான். நம்முடைய தேவனோ வாக்குமாறாதவர். அப்படியிருக்க நாமும் மற்றவர்களுக்கு ஏதாவது ஒரு காரியத்தில் செய்வேன் என வாக்களித்துவிட்டு செய்யாமலிருப்போமானால் இந்த லாபானைப் போலும் “கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி” (நீதி.25:14) என்ற வசனத்திலுள்ளபடியும் இருப்போம். இப்படியிருப்பவர்களை வசனம் வஞ்சகன் என அழைக்கிறது. எனவே நாம் மற்றவர்களை வஞ்சியாதிருப்போமாக!

அன்பு சகோதரிகளே, வேதம் எச்சரிக்கிறபடி சாத்தான் நம்மை வஞ்சிக்க இடம் கொடாமலும், நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளாமலும், மற்றவர்களை வஞ்சியாமலுமிருந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி கிரியை நடப்பிப்போமாக!

**தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது - பிரசங்கி 31:26**



என்றான். அதைபோல அனனியாவுக்கு உடந்தையாக அவனுடைய மனைவி செயல்பட்டபடியினால் அவளும் அழிக்கப்பட்டாள். ஆனால் யூதாசுக்கு அவனுடைய குடும்பம் உடந்தையாக இருந்ததாக எங்கும் நாம் வாசிக்கமுடியவில்லை. அவனுடைய குடும்பத்தை பற்றி அதிகமாக எங்கும் சொல்லப்படவும் இல்லை. அவனே தனித்து சென்று அவரைக் காட்டிக்கொடுத்தால் எனக்கு என்ன கொடுப்பீர்கள் என்று கேட்டான். ஆகையால் அவன் தேவசமுகத்திலிருந்து விலக்கப்பட்டான். உங்களுடைய ஆத்துமாவை பாவத்திற்கு விலக்கி காத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**பொது அறிவு சோதனை**

**1. தமிழ் நாட்டின் நுழைவாயில் எனப்படுவது எது?**
**அ) சென்னை ஆ) கோவை இ) தூத்துக்குடி**
**2. இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?**
**அ) வில்சன் ஆ) ஜோன்ஸ்சால்க் இ) லூயிஸ்**
**3. பசுமை புரட்சியின் தாயகம் எது?**
**அ) மெக்ஸிகோ ஆ) தைவான் இ) தென்கொரியா**
**4. உலகின் முதல் செயற்கைகோளை உருவாக்கிய நாடு எது?**
**அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா இ) ஜப்பான்**
**5. 9-வது ஆசிய கோப்பைபோட்டி எந்த நாட்டில் நடைபெறும்?**
**அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) இலங்கை**
**விடை 1. தூத்துக்குடி 2. ஜோன்ஸ்சால்க் 3. மெக்ஸிகோ 4. ரஷ்யா 5. பாகிஸ்தான்**

**இலங்கை ஆசியசேவை SW 25 மேற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.30 முதல் 5.45 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

**வேத அறிவுப்போட்டி எண் 130 -ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. P.சோபனா | - நாகை |
| 2. Mrs.கிரேஸ் ஸ்டெல்லா | - சென்னை |
| 3. Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| 4. Sis.தேவகிருபை | - கோடை |
| 5. Bro.எதிராசன் | - சங்ககிரி |
| 6. Bro.ஜான் செல்லையா - மதுரை | |
| 7. A.ரெபேக்காள் | - மதுரை |
| 8. Mrs.மெல்சிடா | - திண்டுக்கல் |
| 9. Tmt.மரகதம் திரவியம் - கோம்பை | |
| 10. T.ராஜாத்தி | -கோம்பை |
| 11. A.பூங்கோதை | - ஈரோடு |
| 12. M.ராஜேந்திரன் | -ஒட்டநத்தம் |
| 13. R.கஸ்தூரி | -ஒட்டநத்தம் |
| 14. R.கிப்ட்ராஜாமணி | - ஒட்டநத்தம் |
| 15. M.மேத்யு | - பாப்பிரெட்டிபட்டி |
| 16. R.சரோஜா | -திருநெல்வேலி |
| 17. Mrs.மெர்சிடக்லஸ் | -கோவை |
| 18. M.வளர்மதி | -சேலம் |
| 19. P.இந்திராபாண்டியன் | -திருமங்கலம் |
| 20. P.சூர்யபிரியா | -திருமங்கலம் |
| 21. M.கமலவேணி | -சென்னை |
| 22. J.நிர்மலாஜான் | -மதுரை |
| 23. Mrs.பன்னீர்விக்டர் | -தாராபுரம் |
| 24. V.F.சர்லோ | -பாண்டிச்சேரி |
| 25. K.மேகன் | -குமாரபாளையம் |

**வேத அறிவுப்போட்டி எண் 130 -ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. சகரியா | - சக.7:5 |
| 2. காலத்தை | - எபே.5:16 |
| 3. தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே | - மல்.3:8 |
| 4. தேவதூதர்கள் | - ஆதி.28:12 |
| 5. என் கிரியைக்குப் | - பிலி.1:22 |
| 6. பார்வோன் | - யாத்.12:31 |
| 7. ஆம் | - கொலோ.4:11 |
| 8. நாதாபும், அபியூவும் | - லேவி.10:2 |
| 9. பவுல் | - 1தெச.3:8 |
| 10. பவுல் | - 2தெச.3:13 |

# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

### பாடம் -5 திருடுதல் - Stealing

*J.C.Choate*




-சென்ற மாத தொடர்...

மீண்டும் இயேசு; "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" என்றார் (மத்.6:19-21). இன்னொரு சம்பவத்தில் இயேசு, "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்றார் (யோவா.10:10).

ஒருசமயம் இயேசு எருசலேமில் இருக்கையில், "இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்றவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து; என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்" (மத்.21:12,13). இது இன்றுள்ள பல மார்க்க ஸ்தலங்களை நமக்கு நினைப்பூட்டுகிறது. அவைகளெல்லாம் தேவனுடைய ஆலயங்கள் அல்ல அல்லது கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்றவைகளும் அல்ல. ஆனால் மார்க்க ஸ்தலத்தைப் போலிருந்தாலும் அவைகள் கள்ளர் குகைகள். அங்குள்ள எல்லாவகையான மக்களும் அங்கு வருகின்ற ஏழை மக்களிடமிருந்து இலாபகரமானவற்றை எடுத்துக் கொண்டு வருகின்றார்கள். அவர்கள் எல்லாவித பொருட்களையும் விற்று அதிகப் படியான கிரயத்தை எடுத்து அவர்களை ஏமாற்றி எவ்வளவு கூடுமோ அந்த அளவிற்கு அவர்களின் இலாபகரமானவற்றை எடுத்துக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட பழக்கவழக்கங்கள் வெட்கத்திற்குரியது. ஆனால் இயேசு எருசலேமிலிருந்த தேவாலயத்திலும் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததைக் கண்டு, இது மெய்யாகவே பரலோகத்தின் தேவனை அடையாளப் படுத்தவில்லை என இப்படிப்பட்ட பழக்கவழக்கங்களைக் கடிந்துகொண்டார்.



பெண்கள் பகுதி

# வஞ்சிக்கப்படாதிருங்கள்

## Be Not Deceived

*- Glory Arjunan*



இன்றைய உலகம் அநேகரை வஞ்சிக்கின்றதாக காட்சியளிக்கிறது. இப்படிப்பட்ட உலகில் ஸ்திரீகளாகிய நாம் அநேகவிஷயங்களில் வஞ்சிக்கப்படுகின்றோம். நமது ஆதித்தாயாகிய ஏவாளும் கூட கண்களின் இச்சைக்கு இடமளித்து வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள், நாமும் கூட இந்த மாய உலகை இச்சித்து மாய்ந்து போய்விடக்கூடாது. கிறிஸ்தவ சகோதரிகளுக்கு வேதாகமத்தின் மூலம் எச்சரிப்பின் சத்தம் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. இச்சத்தத்திற்கு செவிசாய்ப்போமா?

சாத்தானால் வஞ்சிக்கப்படுதல்: சாத்தான் நம்மை வஞ்சிக்கிறவனாயிருக்கிறபடியால் சாத்தானால் நாம் வஞ்சிக்கப்படுகிறோம். ஏவாளை சர்ப்பம் வஞ்சித்தது என ஆதி.3:13-ல் வாசிக்கிறோம். ஏவாளின் பார்வைக்கு இன்பமாய் காட்சியளித்தது அந்த விலக்கப்பட்ட கனி. அதைப் புசித்தாள், மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ.2:14). அவளுடைய கண்களின் இச்சை சாத்தானுக்கு இடமளிக்கச் செய்தது முடிவில் சர்ப்பம் வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள் (ஆதி.3:13). இதைப்போலவே பொருளாசையாகிய பிசாசு நம்மை வஞ்சிக்கிறது. ஆம், நமக்கு உலகப்பொருட்களின் மேல் அளவில்லா ஆசை ஏற்படுகிறது, அதை வாங்கலாமா? இதை வாங்கலாமா? என ஸ்திரீகள் அழிந்து போகும் பொருட்களின் மீது கண்களைப் பறக்கவிட்டு பொருளாசையில் பழகிபோய்விடுகின்றனர். இப்படி பொருளாசையில் பழகின இருதயமுடையவர்களை வேதம் சாபத்தின் பிள்ளைகள் (2பேது.2:14) என அழைக்கிறது. அன்பு சகோதரிகளே, நாம் ஆசீர்வதிக்கப்படவே அழைக்கப்பட்டுள்ளோம். பிசாசு நம்மை வஞ்சிக்க இடம் கொடாதிருப்போம். நம்முடைய நாட்டில் கறிக்கோழி வளர்ப்பது போல சில வெளிநாடுகளில் மாம்சத்திற்கென்று வெள்ளை பன்றி வளர்ப்பார்களாம். அவைகளை கசாப்புக் கடைக்குப் பிடித்து செல்லுவது மிகக்கடினமாம். எனவே அவைகளுக்குப்பிடித்தமான பீன்ஸ் பயிர்களை அவைகளுக்கு முன் அள்ளி இறைப்பார்கள், அந்த பன்றிகள் பீன்ஸ் பயிர்களால் ஈர்க்கப்பட்டு கசாப்பு கடைவரை இறைக்கப்பட்ட பயிர்களைத் தின்னும் ஆர்வத்தில் தங்களுடைய நிலையை அறியாமல் கசாப்பு கடைக்கே வந்து சேர்ந்துவிடுமாம். பார்த்தீர்களா! சகோதரிகளே உலகம் இப்படித்தான் பல பொருட்களின் மேல் ஆசைகொள்ளசெய்து நம்மை சாபத்திற்குள்ளாக்கிவிடும். சாத்தான் நம்மை வஞ்சிக்க இடங்கொடாது அவனுக்கு எதிர்த்து நிற்போமாக!

நம்மை நாமே வஞ்சித்தல்: சில வேளைகளில் நம்மைநாமே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். எப்போது தெரியுமா? நாம் திருவசனத்தைக் கேட்டும்

ஆராதனைசெய்யும்படி வாங்குவதற்கு மார்க்கெட்டுக்குச் சென்றார்கள் என கற்பனை செய்கிறீர்களா?

இல்லை, பதிலாக, நான் பார்க்கிறேன் அவர்களுக்குள் திட்டமிட்டு ஒவ்வொரு வாரம் வாரம் கர்த்தருடைய நாளில் மிகச்சிறந்த மாவினையும் எண்ணெயையும் எடுத்து, மிகச் சிறந்த பழத்தினை எடுத்து மிக அழகாக நினைவுகூருதலுக்கென்று ஆர்வத்துடன் தங்களது சிறப்புரிமையென எண்ணி ஆயத்தம்செய்ய முன் வந்திருப்பார்கள் சந்தேகமின்றி, அனைத்து நேரங்களிலும் அவள் ஆராதனைக்கென்று மிக அவசியமான அடையாளங்களாகிய அப்பம் தயாரிக்க தேவையான பொருட்களை ஆயத்தம் பண்ணுவதிலும், அவள் திருவிருந்தில் நினைவுகூர்ந்தவளாக மிகுந்த அன்புடன் அதையே நினைத்திருந்திருப்பாள்.

அவள் வழிந்தோடும் ஆவியுடன் கூட வேலை செய்திருப்பாள், அத்தோடு தேவனுக்கு தன்னுடைய சொந்த கைகளினால் இந்த சிறந்த சேவையை செய்யவும் உணர்த்தப்பட்டிருப்பாள். தேவன் இப்படிப்பட்ட சரீரப்பிரகாரமான கரியங்களை ஆராதனையின் பகுதியாகவும் மேலும் சரீர கரங்களால் செய்யக்கூடிய இந்த வேலையை தேவன் தீர்மானித்துள்ளார். அவளுடைய கரங்கள் அந்த நாளில் கர்த்தருக்கென்று இப்பேர்பட்ட சேவை செய்ய அவள் கண்டிப்பாக அவள் உத்வேகத்துடன் செயல்பட்டிருப்பாள்.



இந்த பாத்திரங்கள் வழக்கமாக யூதர்களால் ஆராதனையில் தங்கம் மற்றும் வெள்ளியினால் குறிப்பாக வடிவமைக்கப்பட்டு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்குமென நான் நிச்சத்திருக்கிறேன், பிறகு இவைகளை தேவாலயத்திற்கென்று தனியாகப் பயன்படுத்தவும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய மரணத்தையும் அவருடைய அடக்கத்தையும் வர்ணிப்பதில் மிகுந்த கவனத்துடன் இந்த பாத்திரங்களைப் பயன்படுத்துவதில் அக்கறைசெலுத்தினர். அவர்கள் சர்வ சாதாரணமாகவோ, அரைமனதுடனோ இந்த பாத்திரங்களை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள்.

மாறாக இது ஆராதனையில் ஒரு பகுதியாக இருந்தபடியினால் தங்களுடைய சொந் நேரத்தை தேவனுடைய திருவிருந்தில் பங்குகொள்ளுவதற்காகவும் யாரெல்லாம் ஆயத்தம் பண்ணினார்களோ அவர்கள் அதை தங்களுடைய சிறப்புரிமையாக எண்ணினார்கள்.

தேவன் சரீரப் பிரகாரமான ஒவ்வொரு செயலில் செய்தது போல, ஆராதனை செய்யும் இடத்தை சுத்தம் செய்வதிலும், சுகமில்லாதவர்களுக்கு உணவு தயாரிப்பதில் அதே மனநிலையை கொண்டிருத்தலும் வேண்டும். எவ்விடத்திலெல்லாம் தேவன் தம்முடைய வேலையைச் செய்யும்படி மனிதகரங்களை நாடுகிறாரோ, அங்கெல்லாம் சந்தோஷத்துடன் அவர்கள் தனிப்பட்ட அழகான ஆராதனை என தங்களை அந்த சேவைக்கு ஒப்புக் கொடுத்தார்கள்.

நாம் குறுகிய பார்வைகொண்டிருந்தபோது எவ்வளவு காரியங்களை இழந்திருக்கிறோம், நாம் தேவனோடு நெருக்கமான உறவுக்குரிய சிறந்த வாய்ப்புகளை காணத் தவறியிருக்கிறோம்.



இயேசு பிதாவினிடத்திற்குச் செல்ல ஒரே வழி என போதித்தார் (யோவா.14:6), இருந்தபோதிலும் மனிதன் உறுதியாக பரலோகத்திற்குச் செல்ல பல வழிகள் உண்டென போதிக்கின்றனர். இயேசு யோவா.10:1-ல் இதே கொள்கையை போதித்தார். அவர் சொல்லும்போது ஆட்டுத் தொழுவத்துக்குள் பிரவேசிக்க ஒரே வாசல் அல்லது சபை உள்ளது என்றார். தொடர்ந்து சொல்லுகையில் ஒருவன் வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான் என்றார்.

நாம் இயேசு தாமே எவ்வாறு இரண்டு கள்ளர்கள் நடுவே சிலுவையில் அறையப்பட்டார் என்பதைப் பற்றிய விஷயத்தை நன்கு அறிவோம். மெய்யாகவே இயேசுவினிடத்தில் பாவமில்லை, மரிக்கவேண்டியதுமில்லை, ஆனால் அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார், பொய்யாக குற்றஞ்சாட்டப்பட்டார். பொய்யான நியாய விசாரணை கொடுத்தனர். மேலும் முடிந்தவரை குற்றப்படுத்த வகை தேடினார்கள். அவர் இரண்டு கள்ளர்கள் நடுவில் சிலுவையிலறையப்பட்டார். அந்த கள்ளர்களில் ஒருவன் மிகவும் புத்திசாலி, நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். இவரே ஒரு குற்றமும் செய்யவில்லையே என்றான். அந்த புத்தியுள்ள கள்ளன் அவருடைய ராஜ்யத்தில் தான் வரும்போது தன்னை நினைத்தருளும் என்று கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டான். இயேசு அவனை நோக்கி:இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் அல்லது நீதிமான்கள் மரித்த இடத்தில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். கிறிஸ்துவினால் அவனை அவ்விடத்திலே மன்னிக்க முடிந்தது, அப்படியே அவர் செய்தார். சிலர் இதை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தி இன்று ஒருவன் எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்கின்றனர். ஆனால் நம்முடைய சூழ்நிலை அவனுடைய சூழ்நிலைக்கு ஒத்ததாக இல்லை. அவன் கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு முன் வாழ்ந்தான், நாமோ கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் வாழ்கிறோம். கர்த்தருடைய சித்தமும் மன்னிக்கும் தன்மையும் முத்திரையிடப்பட்டிருந்தது மேலும் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் கட்டப்பட்டிருந்தது. கிறிஸ்து இப்பூமியில் வாழ்கையில் ஒருவனுடைய பாவங்களை அந்த இடத்திலே மன்னிக்க முடிந்தது ஆனால் அவருடைய மரணத்திற்குப் பிறகு நாம் இரட்சிக்கப்பட என்னசெய்ய வேண்டுமென அவர் விரும்புகிறார் என்பதை நாம் கண்டிப்பாக அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளவேண்டும். அதன் பின் நாம், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான் (மாற்.16:16) என அறிவுறுத்தப்படுகிறோம். இது எல்லாரும் கைக்கொள்ள வேண்டியது, ஆனபடியினால் ஒருவரும் தவிர்க்க முடியாதது. பேதுரு ஒரு திருடனாக யிருந்து கஷ்டப்படுவது ஒரு வெட்கத்திற்குரிய காரியம் என்றார். நாம் "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடு படுகிறவனாயிருக்கக்கூடாது" என்று 1பேது.4:15-ல் வாசிக்கிறோம். மீண்டும் பவுல், "எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது" (ரோம.13:9). -தொடரும்...

# நான் தேவனுடைய சத்தமாயிருக்கிறேன்

## I AmThe Voice of God

-Govindarajan



யோவான் சுவிசேஷம்1:19-23

யோவான்1:19-ன்படி ஆசாரியரும் லேவியரும் யோவானிடத்தில் வந்து நீ யார் என்று கேட்டார்கள். அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டது மன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். அப்படியானால் லேவியர்கள் அவனை கிறிஸ்து என்று நினைத்திருந்தார்கள். அவனோ நான் கிறிஸ்து அல்ல என்று அறிக்கையிட்டான். மேலும் அவர்கள் யோவானை அநேக வார்த்தைகளினாலே தொந்தரவு செய்தார்கள். எப்படியென்றால் நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும் அல்ல என்றான்.

அவர்கள் பின்னும் அவனை நோக்கி நீர் யார் எங்களை அனுப்பினவர்களுக்கு உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மை குறித்து என்ன சொல்கிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவன் கர்த்தருக்கு வழியை செவ்வை பண்ணுங்கள் என்ற ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்.

இன்றைய நாட்களில் அநேகர் தன்னை, அருட்தந்தை, பேராயர், பிஷப், ஃபாதர், அப்போஸ்தலன், ரெவரெண்டு, பாஸ்டர் என்றும் சொல்லி அழைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் யோவானோ தன்னை சத்தம் என்று சொல்லி, தம்முடைய ஊழிய காலங்களில் இப்படியாக உபதேசித்து இருக்கிறார்.

மத்தேயு23:2-ல் வேதபாரகரும், பரிசேயரும், மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்றும் மத்தேயு23:5-ல் அவர்கள் தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர்காண வேண்டுமென்று செய்கிறார்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களை பெரிதாக்கி விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்.

நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லோரும் சகோதரராய் இருக்கிறீர்கள்.

பூமியிலே ஒருவரையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்கு பிதாவாயிருக்கிறார்.

நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார் என்று நமது ஆண்டவர் குறிப்பிடுகிறார். இன்றைய நாட்களில் அநேகர் இந்த உபதேசங்களை மறைத்து தன் இஷ்டமான உபதேசங்களை, மனுஷர் உபதேசங்களை, சுய உபதேசங்களை செய்கிறார்கள். மேலும் கிறிஸ்துவானவர் அப்படிப்பட்ட உபதேசங்களை செய்கிறவர்களை



இயேசு மரித்தபோது, விசுவாசிகள் அவருடைய சரீரத்தை சிலுவையிலிருந்து எடுத்தார்கள். விசுவாசிகள் அவருடைய சரீரத்தை சுகந்த வர்க்கங்களுடனே துய்யதான மெல்லிய துப்படியினால் சுற்றி, அவருடைய சரீரத்தை சீலைகளில் சுற்றிக் கட்டி பின்பு விசுவாசிகள் கல்லறையில் வைத்தார்கள். அதன் பின்பு வாரத்தின் முதல்நாள் காலையில் கவலையோடு று ஸ்திரீகளும் விசுவாசிகளும் சுந்தவர்கங்களையும் பரிமளதைலங்களையும் அவர் மரணத்தில் நீண்டநாள் இருப்பார் என எதிர்பார்த்து அவருடைய சரீரத்தை ஆயத்தப் பண்ணும்படி சுகந்தவர்கங்களையும், பரிமளதைலங்களையும் ஆயத்தம் பண்ணி கல்லறைக்குக் கொண்டுவந்தார்கள்.

இது அந்த மரணத்தின் நினைவுகூருதலில், வாரத்தின் முதல் நாள் தோறும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் நினைவுகூர்ந்தது போல நாம் அவர் தம்முடைய மரணத்தை ஜெயித்தார் எனகூடிவருகிறோம். "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7).

நினைவுகூருதலில் தேவனுடைய குமாரனின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலில் கிறிஸ்தவர்கள் முக்கியமாக கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் மாதிரியாக வைக்கப்பட்ட புளிப்பில்லா அப்பத்திலும் பழச்சாறிலும் பங்கு கொள்ளும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த ஐக்கியத்திற்குரியதே நினைவுகூருதல் ஆகும். ஆனால் "ஆயத்தமாகுகிற" அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அதிகமாக கிறிஸ்துவின் சபைகளில் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருகிறார்களா? மெய்யான விருந்துக்கு நிழலாயிருந்த பஸ்கா அப்பத்தைப் போல புதிதான அப்பத்தை அன்புடனும், பயத்துடனும் விசுவாசிகளின் கைகளினால் தயாரிக்கப்படுகிறதா? இல்லை, கவலைக்குரியது, அதிகமான பிராந்திய சபைகளில் புதியதல்லாத உடைந்து போகக்கூடியதை இந்த தியாக நினைவுகூருதலுக்குப் பயன்படுத்துகின்றனர். யூதகுலத்தவர்களால் தயாரிக்கப்பட்ட அப்பமானது "பஸ்காவுக்காக அல்ல" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் அற்பமானதை மிகைப்படுத்துவதாக நீங்கள் நினைக்கிறீர்களா? இருக்கலாம். அப்படி இருந்தபோதிலும் இது அற்பமான காரியமல்ல. கர்த்தர் ஆராதனையில் செய்யக்கூடியதாயிருந்த மிகச் சிறிய காரியங்களை பற்றிகூட மிகவும் கண்டிப்புள்ளவராயிருந்தார். யாத்திராகமம்34:25 பஸ்காவிற்குரிய அப்பத்தைக் குறித்து அவர் "எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப் புளித்தமாவுடன் செலுத்த வேண்டாம்; .." அவர் இன்னும் உபாகமம்16:4-லும்: "ஏழுநாள் அளவும் உன் எல்லைகளிலெங்கும் புளிப்புள்ள அப்பம் உன்னிடத்தில் காணப்படலாகாது..." அவர் கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் கண்டிப்பினை குறைத்து இருந்தாலும்கூட, வழக்கமான மனநிலையைக் காட்டிலும் தேவனுடைய குமாரனின் நினைவுகூருதலைப் பயத்தோடும், நிதானத்தோடும் கைக்கொள்வது நியாயமானதில்லை என நினைக்கிறீர்களா?

மேலும் தேவன் நமது கவனக்குறைவை அறிந்திருந்தாலும் கூட, எப்படியோ இதை வெளிப்படுத்தாமல் இருந்துகொண்டு கிறிஸ்துவுக்காக மனக்கிளர்ச்சியின்றி அக்கறையற்றவர்களாக கிறிஸ்தவர்கள் பின்பகுதியில் உட்கார்ந்து கொண்டு இருக்கையில் அவிசுவாசிகளை நம்முடைய நினைவுகூருதலுக்கு மிக இன்றியமையாததாக கிரியைசெய்ய அநுமதிக்கிறோம்.


மரியாள், யோவான்னாள் மற்றும் மகதலேனாமரியாள் தங்களுடைய கர்த்தரை சிலுவையில் அறைந்து, புறக்கணித்த மக்களால் செய்யப்பட்ட அப்பத்தை

பெண்கள் பகுதி

# ஞாபகச்சின்னம்

## The Memorial

-Betty



"அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். "அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப்பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்" (மத்.26:26-30).

**முதல் நூற்றாண்டு சபையினுடைய ஞாபகச்சின்னத்தின் நியமம்**

"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும்.

"நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து" (1கொரி.15:1-4).

அனேகமாக இன்று கிறிஸ்துவின் சபைகளில் பல கிறிஸ்தவர்களுக்கு, இயேசுவின் மரணத்தை நினைவுகூருதல் மேஜையைச் சுற்றியுள்ள பல ஆண்களின் கூட்டத்தில் ஆரம்பித்து பாத்திரமானது திரும்பவும் கொடுத்தவர்களிடத்தே முடிவடைகிறது. கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருகையில் ஒருவருடைய சொந்த மனச்சாட்சியை நிதானித்து அறிந்து பங்கு பெருகிறதாயிருக்கிறது.

நினைவுகூருதல் என்பது நல்லது, நானே அதிலிருந்து ஒன்றையும் விலக்கவில்லை, ஆனால் ஆனால் ஆராதனைக்காவும், கிறிஸ்துவோடுகூடிய நெருக்கமான உறவுக்காகவும் கூடுகையில் நினைவுகூருதலுக்கென ஆயத்தமாவதில் நாம் ஒருவரையொருவர் சுட்டிக்காட்டுவது ஒரு அற்புதமான நிகழ்வில் வருத்தத்துக்குரியதாயிருக்கிறது.



இப்படியாக கண்டிக்கிறார். மத்.23:15 மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றி திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பான நரகத்தின் மகனாக்குகிறீர்கள் என்றார். இன்று அநேகர் சுய இஷ்டமான உபதேசத்தினாலே அநேகரை நரகத்தின் மகனாக்குகிறார்கள். ஆனால் இயேசுவோடு இருந்த சீடர்களோ தங்களை இயேசுவின் ஊழியக்காரர் என்கிறார்கள்.

இயேசுவோடு இருந்த சீஷர்கள் அப்போஸ்தலர்கள் என்ற தகுதியை வரத்தை பெற்றிருந்தாலும் தங்களை கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்று பேதுருவும் தனது 2ம் நிருபத்தில் தன்னைக் குறித்து சொல்லியிருக்கிறார். 2பேது1-ல் ஊழியக்காரர் என்றே சொல்லுகிறார். பவுலும் 2கொரி.4:5-ல் தன்னை கிறிஸ்துவின் ஊழிக்காரன் என்றே சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்றால் இயேசுவிற்கு ஊழியம் செய்வது. இயேசுவானவர் சொன்னபடி "நான் உங்களுக்கு கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றார் (மத்.28:20).

நாமும் இயேசுவானவர் சொல்லிய உபதேசத்தை சொல்லுவோம்
யோவான்ஸ்நானனைப்போல தேவனுடைய சத்தமாய் இருப்போம்.

**கன்னியாகுமரியில் நடைபெற்ற தமிழக கர்த்தருடைய ஊழியர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட 14-ங்கு மாவட்ட ஊழியர்கள் மற்றும் கன்னியாகுமரி கிறிஸ்துவின் சபையார்**



# தேவ சமாதானம்

## The Peace of God

*R.Volcano Philip*




தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது; இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும், பரிபூரணமாக வாசமாயிருப்பதாக.

நாம் நம்முடைய எல்லா நிகழ்ச்சிகளிலும் எடுத்து உபயோகிக்கிற இந்த வசனம் நம்முடைய கிறிஸ்தவ வாழக்கைக்கு மிகவும் முக்கியமாக இருக்கிறது.

இன்றைக்கு அநேகருடைய வாழ்க்கையில் துன்பம், துக்கம், கலக்கம், குடும்பத்தில் அமைதி இல்லை. சண்டை, பாவம், பரிசுத்த வாழ்க்கை இல்லை காரணம் இந்த வசனம் உங்களுக்குள்ளே வாசமாயில்லை.

கொலோசேய நிருபம் உங்களுக்கு ஏற்கனவே அறிமுகமானதாக தோன்றினால் ஆச்சரியப்படாதீர்கள். அப்.பவுலின் நிருபங்கள் ஓர் ஒழுங்கு முறையைப் பின்பற்றுகிறது. வாழ்த்துக் கூறுதல், ஜெபம், சில கோட்பாடுகள் பிறகு கிறிஸ்துவர்கள் எப்படி நடைமுறையில் வாழ்வது என்பதைப் பற்றியதாக இருக்கிறது.

கொலோசெய நிருபத்தில் உள்ள பல வசனங்கட்கு இணையான வசனம் பிலிப்பியர் நிருபத்தில் எழுதி இருக்கிறார். கொலோசெய நிருபம் நமக்கு நன்றாக அறிமுகமான நிருபமாக தோன்றுகிறது. ஏனெனில் எபேசியரிலுள்ள 155 வசனங்களில் 78 வசனங்கள் ஏதேனும் ஒரு வடிவில் கொலோசெய நிருபத்தில் காணப்படுகிறது. இந்த நிருபம் 4 அதிகாரங்களைக் கொண்டது. (கி.பி. 64-ல் ஆதாமின் காலத்திலிருந்து -4068 ஆம் ஆண்டு) அப்.பவுலினால் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதப்பட்டது.

**1. கிறிஸ்துவின் வசனம்: பிதாவின் வசனம்;** நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது (யோவா.14:24). பரிசுத்த ஆவியானவர் யோவா.16:13 சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். யோவா.16:14-ல் அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் பிதாவின் வார்த்தையையே சொல்கிறார்கள். தேவ வசனம் 2தீமோ.3:16,17 தேவ மனுஷன் தேறினவனாக மாறுவதற்காக அருளப்பட்டிருக்கிறது. தேறினவனாக என்று வாசிக்கும் போது எபே.4:11-ன்படி கிறிஸ்துவினுடைய நிறைவான (பரிசுத்த) வளர்ச்சியின் அளவுக்கு தக்க பூரண (பரிசுத்தம்) புருஷராக்குகிறது. குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக்குகிறது (யோவா.8:29).

**2. உங்களுக்குள்ளே:** கொலோ.1:2-ன்படி கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரருக்குள்ளே, 1கொரி.1:2 பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுக்குள்ளே, ரோ.6;5 இயேசுவின் மரணத்தின் சாயலிலும் அவருடைய உயிர்த்தெழுதலிலும் பங்கு பெற்றவர்களுக்குள்ளே ரோ.8:2-ன்படி கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினாலே பாவ மரண பிரமாணத்தினால் இருந்து விடுதலையாக்கப்பட்டவர்களாகிய உங்களுக்குள்ளே 2கொரி.5:17 புது சிருஷ்டியின் அனுபவத்தை பெற்ற உங்களுக்குள்ளே வாசமாயிருப்பதாக.



**3. சகல ஞானத்தோடும் (சகல தேவ பயத்தோடும்):** யோபு28:28 ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம். நீதி.1:7 கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானம். யோசேப்பு ஆதி.39:9 தேவனுக்கு பயந்து ஞானத்தினால் நிறைந்து தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி என்று சகல ஞானத்தோடும் பாவத்திற்கு விலகினார். இப்படி அந்நிய தேசத்திலிருந்த போதும், அடிமையாயிருந்தபோதும், சிறையிலிருந்த போதும், சங்.105:18 கால்கள் விலங்கிட்டு ஒடுக்கி பிராணன் இரும்பில் அடைபட்டபோதும், எகிப்திற்கு அதிபதியானபோதும் தேவனுக்குப் பயந்து சகல ஞானத்தோடும் ஆதி.49:22-ல் சொல்லப்பட்டபடி கனி தரும் செடியாக காணப்பட்டார். யோபு.1:1 தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகி சகல ஞானத்தோடு சகல விதத்திலும் சோதிக்கப்பட்டபோதும் யோபு19:13-27 அவரை நானே பார்ப்பேன் என்று யோபு 1:22 இவையெல்லாவற்றிலும் பாவம் செய்யாமல் பரிசுத்தமாக தன்னைக் காத்துக்கொண்டார்.

**பவுல்:** 2தீமோ.4:7 நல்ல போராட்டம் போராடி விசுவாசத்தைக் காத்துக்கொண்டு நீதியின் கிரீடம் தரிக்கப்பட்டார். 2கொரி.11:23-28. அநேக பாடுகள் மத்தியிலும் பிலிப்.3:7-14 கிறிஸ்துவின் வசனம் சகல ஞானத்தோடும் வாசமாயிருந்ததினால் ஜெய ஜீவியம் பெற்று தன்னைக் காத்துக்கொண்டார்.

**ஸ்தேவான்:** அப்.7:55-60 கிறிஸ்துவின் வசனம் சகல ஞானத்தோடும் பூரணமாக வாசமாயிருந்ததால் விசுவாசத்திலும், வல்லமையிலும் பரிசுத்த ஆவியின்படி அப்.6:5,8 தன் ஆவியை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் ஒப்படைத்தார்.

**4. பரிபூரணமாக வாசமாயிருப்பதாக:** நமக்குள் 100 சதவீதம் தேவ வசனம் வாசமாயிருக்க வேண்டும். ஒரு சதவிகிதம் குறைந்தாலும் பாவம் குடிகொள்ளும். மாற்.4:18 உலகக் கவலை ஐசுவரிய மயக்கம், மற்ற இச்சைகள் குடி புகுந்து தேவ வசனம் பூரணமாக வாசமாயிராதபடி பாவம் குடி கொள்ளும். இதைத்தான் சங்.1:2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்று தன் அனுபவத்தை சொல்லி 3-ம் வசனத்தில் ஆசீர்வாதத்தை கூறுகிறார். தேவ வசனம் வாசமாயிராவிட்டால் மாற்.7:20-23 பாவம் வாசமாயிருந்து மனுஷனை தீட்டுப்படுத்தும். சங்.19:7-10 தேவ வசனம் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது, ஞானியாக்குகிறது, சந்தோஷிப்பிக்கிறது, கண்களைத் தெளிவிக்கிறது, தெளிதேனிலும் மதுராமாயிருக்கிறது என்கிறார். இதையே எரே.15:16 தேவ வசனம் கிடைத்தவுடனே உட்கொண்டேன் என்கிறார். அப்போது இருதயத்திற்கு மகிழ்ச்சியும், சந்தோஷமுமாயிருக்கிறது என்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலும் இதே சிந்தையோடு கொலோசேயர் பட்டணத்திலுள்ள கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு ஆலோசனையாக நிருபம் எழுதியிருக்கிறார். வாசிக்கிற உங்களுக்குள்ளும் கிறிஸ்துவின் வசனம் சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருக்க வேண்டும் என்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே பிதாவாகிய தேவனை நோக்கி வேண்டுகிறோம். ஆமென்.

❶ பொது மக்கள் விரைவாகவும், எளிதாகவும் பாஸ்போர்ட் பெற ஏதுவாக அடுத்த ஆண்டிற்குள், நாடு முழுவதும் 77 சேவைமையங்கள் துவங்க திட்டமிடப்பட்டுள்ளதாக திட்ட இயக்குனர் ஷாப்டி தெரிவித்துள்ளார்.
❷ இந்திய ரயில்வேயில், அதிக வருவாய் ஈட்டித் தருவதில், தெற்கு ரயில்வே முக்கிய பங்காற்றுகிறது என தெற்கு ரயில்வே பொது மேலாளர் தீபக் கிருஷ்ணன் கூறியுள்ளார்.
❸ இணையதளம் மூலம் மின் கட்டணம் செலுத்தும் வசதி விரிவுப்படுத்தப்பட்டது.
❹ சீனாவில் அதிவேக புல்லட் ரயில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
❺ இந்திய அணியின் நட்சத்திரவீரர்களான சச்சின், தோனி விரைவில் "சுகோய்" போய் விமானத்தில் பறக்க உள்ளனர். இதற்கு மத்திய பாதுகாப்புதுறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

**நடப்புச் செய்திகள்**